**தலைப்பு 224 – இலங்கை விமானப்படை**

------------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை விமானப்படையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் இலங்கை விமானப்படையின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் உள்ளடங்கிய பொழிப்பு அறிக்கை 2021 ஜூன் 28 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் இலங்கை விமானப்படை தொடர்பான வருடாந்த விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2021 அக்தோபர் 28 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இவ் அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களில் இருந்தான தாக்கத்தை தவிர்த்து, 2020 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான இலங்கை விமானப்படையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக ஆக்கப்பட்டுள்ளது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமான உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1)

பிரிவின் பிரகாரம் இலங்கை விமானப்படையினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாகப் பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் இலங்கை விமானப்படையின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன், அம்முறைமையின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களில் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், அதன் பொருண்மை தன்மையை இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்பட வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றை பெற்றுக் கொள்ளும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும்

சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும், நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள், பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம், பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்ததாக,

(அ) முன்னைய ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

| பந்தியுடன் தொடர்பு | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை |
|---|---|---|
| 2019 154(6) அறிக்கை 3.6(ஆ) | 2011 நவம்பர் 30 திகதிய 852 இலக்கம் கொண்ட விமானப்படைக் கட்டளையின் 5 ஆம் பந்தியின் பிரகாரம் இலங்கை விமானப்படை தலைமையகத்தில் பல்வேறு முகாம்கள் மற்றும் அலகுகளில் உள்ளக நிதியங்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. இந்த நிதியங்களின் செயற்பாட்டு அலுவல்களுக்காக மற்றும் நிதியங்களின் மூலம் செயற்படுத்தப்படுகின்ற இலாபம் உழைக்கும் செயற்திட்டங்களுக்காக இலங்கை விமானப்படைக்குச் சொந்தமான பௌதீக மற்றும் மனிதவளங்கள் பயன்படுத்தப்பட்டிருந்தன. நிதிப் பிரமாணம் 154 இன் படி இந்த உள்ளக நிதியங்கள், நியதிச் சட்ட நிதியங்களாக நிறுவியிருக்காத காரணத்தினால் அவற்றின் அலுவல்கள் திறைசேரியின் மற்றும் இலங்கை பாராளுமன்றத்தின் கட்டுப்பாட்டின் கீழ் அடங்காமல் காணப்பட்டதெனவும் மேலும் அவதானிக்கப்பட்டது. | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசியலமைப்பின் ஏற்பாடுகளின் படி மற்றும் 2016 ஜூன் 24 திகதி நடைபெற்ற அரச கணக்குக் குழு கூட்டத்தின் கட்டளையின் பிரகாரம் இலாபம் ஈட்டக்கூடிய செயற்திட்டங்களின் செயற்பாடுகள் தொடர்பாக பாராளுமன்ற மேற்பார்வை அலுவல்களை முறைப்படுத்தும் பொறிமுறை ஒன்று தயாரிக்க வேண்டியுள்ளது. |

## 1.6 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதிக் கூற்றுக்கள் சுற்றறிக்கை ஏற்பாடுகளுடன் இணக்கமின்மை

அரச கணக்குத் திணைக்களத்தினால் வெளியிட்டிருந்த வழிகாட்டல் இலக்கம் 06 இன் பிரகாரம் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், அத் தேவைகளை விலகிய சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக முற்பணக் கொடுப்பனவுகளின் வித்தியாசமாகிய ரூபா 126,425 இற்கான பெறுமதி மற்றும் முற்பணப் பெறுவனவுகளின் வித்தியாசம் ஆகிய ரூபா 129,345 இற்கான பெறுமதி கட்டுநிதி சீராக்கல் கணக்கில் சீராக்கியிருக்கவில்லை. | அரச கணக்குகள் வழிகாட்டல் இலக்கம் 6 – 3 பந்தியின் படி திறைசேரியின் கணினி அச்சுப் பிரதியை அடிப்படையாகக் கொண்டு படிவங்கள் திறைசேரிக் கணக்குகளுடன் சீராக்கல் மேற்கொண்டு கணக்குகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | அரச கணக்குத் திணைக்களத்தின் வழிகாட்டல் இலக்கம் 06 இன் (iv) இன் கீழ் குறிப்பாக காட்டப்பட்டுள்ள அறிவுரைகள் மற்றும் வழிகாட்டல்களின் பிரகாரம் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டியிருந்தது. |
| (ஆ) | வைப்புக் கணக்குகள் தொடர்பான கொடுப்பனவுகளின் கீழ் திறைசேரி அச்சுப் பிரதியில் பெறுமதி மற்றும் திணைக்கள புத்தகங்களின் பெறுமதிகள் இடையே வித்தியாசமாகிய ரூபா 15,527,400 தொகை கட்டுநிதி சீராக்கல் கணக்குடன் சீராக்கல் செய்திருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (இ) | தலைப்பு 224 இன் கீழ் செலவுகள் ரூபா 39,360,340,597 தொகை காணப்பட்டதுடன், அது திறைசேரி அச்சுப் பிரதியின் படி ரூபா 40,578,619,466 தொகையாக காணப்பட்டது. அதன்படி தலைப்பு 224 இன் கீழ் ஏனைய திணைக்களங்கள், நிறுவனங்களினால் செலவிடப்பட்டிருந்த ரூபா 1,218,278,868 தொகைக்கான செலவுகள் கட்டுநிதி சீராக்கல் கணக்குடன் சீராக்கல் செய்திருக்கவில்லை. | ரூபா 1,218,278,869 தொகை மூலம் நேர் வரவு வைத்தல்கள் சித்தரித்துக் காட்டப்படுகின்றது. அப் பெறுமதி கட்டுநிதி சீராக்கல் கணக்கில் குறுக்குப் பதிவுகளின் மூலம் சீராக்கல் செய்யப்பட்டுள்ளது. | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | ஏனைய திணைக்களங்களுக்காக மேற்கொள்ளப்பட்டிருந்த செலவுகள் ரூபா 965,826,042 தொகை கட்டுநிதி சீராக்கல் கணக்கில் ரூபா 899,951,757 தொகை என ரூபா 65,874,305.93 தொகை சீராக்கல் செய்யப்பட்டிருந்தது. | சீராக்கல் கணக்கில் ஏனைய திணைக்களங்களுக்கான செலவு என பணமாக செலவிடப்பட்டிருந்த செலவுகள் மாத்திரம் சீராக்கல் செய்யப்பட்டது. | - மேற்படி - |

## 1.6.2 வருமானங்கள் அல்லாத பெறுவனவுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஏஸீஏஸ் படிவத்துடன் தொடர்புடைய வருடாந்த நிதிக் கூற்றுக்களில் வருமானம் அல்லாத பெறுவனவுகளின் கீழ் காட்டப்பட்டிருந்த ஏனைய பெறுவனவுகளின் பெறுமதி ரூபா 367,439,004 தொகையாக காணப்பட்டதுடன், அப்பெறுமதி திறைசேரி கணினி அச்சுப் பிரதியின் படி ரூபா 1,277,948,568 தொகையாக இருந்தமையால் ரூபா 910,509,564 இனால் வித்தியாசமாக காணப்பட்டது. | வழிகாட்டல் இலக்கம் 06 இல் ஏனைய பெறுவனவுகளில் உட்படுத்தப்பட வேண்டிய விடயங்கள் அல்லது கணிக்கக்கூடிய முறை குறிப்பிடப்பட்டிருக்காமையால் காசு அடிப்படையில் ஏனைய பெறுவனவுகள் (குறுக்குப் பதிவுகள் தவிர) உள்ளடக்கப்பட்டுள்ளது. | நிதிக்கூற்றுகளில் மற்றும் திறைசேரி கணினி அச்சுப் பிரதிகளின் பெறுமதிகளிடையே காணப்படும் வித்தியாசங்களை பகுப்பாய்வு செய்து ஒவ்வொன்றும் பொருந்தக் கூடிய முறையில் நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 1.6.3 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக்கூற்று

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணப் பெறுவனவுகள் திணைக்கள புத்தகங்களின் படி ரூபா 131,901,952 தொகையாக காணப்பட்ட போதிலும் திறைசேரி அச்சுப் பதிவின் படி அது ரூபா 132,031,297 தொகையாக காணப்பட்டமையால் ரூபா 129,345 தொகைக்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது. மேலும், முற்பணக் கொடுப்பனவுகள் திணைக்களப் புத்தகத்தின் படி ரூபா 123,461,375 தொகை எனினும், திறைசேரி அச்சுப் பதிவின் படி அவை ரூபா 123,587,798 தொகையாக இருந்தமையால் ரூபா 126,423 தொகைக்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது. | ஏசீஏ 5 படிவத்தில் பணமாக காட்டப்படும் பெறுமதியில் முற்பணக் கணக்கு 011 உம் குறுக்குப் பதிவுகள் என 012 உம் சித்தரித்துக் காட்டப்பட்டுள்ளது. வழங்கப்பட்டிருந்த அரச கணக்குத் திணைக்கள வழிகாட்டல் இலக்கம் 06 இன் 03 பந்தியின் படி திறைசேரி அச்சுப் பிரதியை அடிப்படையாகக் கொண்டு ஏசீஏ 5 படிவம் திறைசேரிக் கணக்குகளுடன் சீராக்கல் செய்யப்பட்டு கணக்குகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. | நிதிக் கூற்றுக்கள் மற்றும் திறைசேரி அச்சுப் பிரதியின் பெறுமதிகள் இடையே காணப்படும் வித்தியாசங்களை பகுப்பாய்வு செய்து ஒன்றிற்கு ஒன்று பொருந்தக் கூடிய விதமாக நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் பீ கணக்கு உடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த சிவில் தனிநபர் கணக்கு அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதிகள் மற்றும் கட்டுநாயக, தியதலாவ, சீனக்குடா மற்றும் மொரவெவ ஆகிய முகாம்களில் அனுப்பி இருந்த கணக்கு மீதிகள் இடையே ரூபா 2,241,464 இற்கான வித்தியாசங்கள் காணப்பட்டன. | இறுதிக் கணக்குகளை சமப்படுத்தும் போது மேற்கொள்ளப்பட்டிருந்த பரிசோதனைகளின் போது உரிய சரி செய்தல் மேற்கொள்ளப்பட்டிருந்து. தற்போது காணப்படும் சரியான கடன்மீதிகள் அட்டவணை உரிய முகாம்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன. | கடன்மீதிகள் தொடர்பாக முறையான மேற்பார்வை செயற்பாடு ஒன்று நிறுவப்பட்டு பேணிச் செல்வதன் மூலம் சரியான கடன்மீதி தொடர்பாக நாளதுவரை ஆக்கப்பட்ட தரவுகள் பேணப்படுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.6.4 வைப்புகள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஏசீஏ 4 படிவத்தின் பிரகாரம் பொது வைப்புக்களின் கொடுப்பனவுப் பெறுமதி கணினி அச்சுப் பிரதியின் படி ரூபா 409,428,340 தொகையாக காணப்பட்டதுடன், அது திணைக்கள புத்தகங்களின் படி ரூபா 393,900,939 தொகையாக இருந்தமையால் ரூபா 15,527,401 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது. | வருடாந்த நிதிக்கூற்றுக்களின் பெறுமதிகள் மற்றும் திறைசேரி கணக்குக் கூற்றுக்கள் இடையே வித்தியாசம் ஒன்று இல்லை என காட்டப்பட்டுள்ளது. | திறைசேரியின் கணினி அச்சுப் பிரதியின் பெறுமதிகள் மற்றும் திணைக்கள புத்தகங்களின் பெறுமதிகளிடையே முரண்பாடுகளை பகுப்பாய்வு செய்து சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.6.5 ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்றின் படி நிதிச் செலவுகளில் அடங்கியுள்ள மூலதனச் சொத்துக்கள் தனதாக்கல்களின் கூட்டுத்தொகை ரூபா 1,898,013,532 தொகை எனினும், ஏசீஏ 6 படிவத்தின் பிரகாரம் ஆண்டிற்கான போது நிதி அல்லாத சொத்துக்களை கொள்வனவு செய்தல் மற்றும் தனதாக்கல்களின் கூட்டுத்தொகை ரூபா 613,759,774 தொகையாக இருந்தது. | அரச கணக்கீட்டுத் திணைக்கள அறிக்கையின் மீதிகள் மற்றும் அத்திணைக்களத்தின் அறிவுரைகளின் படி புதிய மீதிகள் என உட்படுத்தப்பட்டிருந்தவையாகிய ரூபா 2,132,982,818 இல் ஆண்டிற்கான கொள்வனவுகள் ரூபா 1,284,253,758 பெறுமதி ஒன்று காணப்படல், ரூபா 848,729,060 தொகை நிகழ்நிலையின் கீழ் உட்படுத்தப்பட்டவை திறைசேரி கணினி முறைமையில் புதிய கொள்வனவுகள் என இனங்கண்டிருத்தல். | ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்களின் பெறுமதி திறைசேரி அச்சுப் பதிவுகள் மற்றும் நிதிக்கூற்றுக்களின் பதிவுகள் உடன் இணங்கக் கூடியவாறு பேணப்பட வேண்டும். |

### 1.6.6 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 மார்ச் மாதம் முதல் ஜூலை மாதம் வரை விமானப்படை நலன்புரி நிதியத்திற்கு ரூபா 4,075,530 தொகை மீளளிப்புச் செய்யப்பட்டிருந்ததுடன், அதற்கு உரிய வழங்குனரின் இன்வொயிஸ் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | இவ்வாறான கணக்காய்வு அவதானிப்புக்கள் எதிர்காலத்தில் ஏற்படாதவாறு குறிப்பிட்ட பில் பத்திரங்கள் கொடுப்பனவு உறுதிச் சான்றுதழ்களுடன் சமர்ப்பிப்பதற்காக இலங்கை விமானப்படையின் பிரிவுத் தலைவர்களை அறிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது என அறிவிக்கின்றேன். | கணக்காய்வு விடயப் பரப்பு வரையறுக்கப்படாமல் தேவையான அடிப்படை ஆவனங்கள் கணக்காய்வுப் பிரிவுகளுக்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 வருமான முகாமைத்துவம்

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வருமானத் தலைப்பு 20-03-02-16 விமான வாடகை வருமானத்தின் கீழ் வருமான மதிப்பீடு தயாரிக்கும் போது இலங்கை விமானப்படையினால் மீளாய்வாண்டு போலவே 4 ஆண்டுகளின் போது வருமான மதிப்பீடு 33 சதவீதம் முதல் 80 சதவீதத்திற்கு இடைப்பட்ட வீச்சில் கழித்து திருத்தப்பட்டிருந்தது. மேலும், 2016 ஆண்டிற்கு நேரொப்ப 24 சதவீதம் முதல் 89 சதவீதம் வரையான வீச்சில் வருமானம் உழைத்தல் பிரதிகூலமான கழிப்புகளுடன் முரண்பட்டுக் காணப்பட்டது. | • வாணிப செயற்பாட்டு அலுவல்கள் மேற்கொள்ளல் தொடர்பாக பயன்படுத்தக் கூடிய விமானங்கள் வரையறையாக இருத்தல்.<br>• சட்டச் சிக்கல்களின் காரணமாக எதிர்பாராதவாறு உள்ளக விமான சேவைகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருத்தல்.<br>• குறைந்த கிரயத்தில் தனியார் விமான சேவைகள் வழங்கும் நிறுவனங்கள் உருவாகியிருத்தல்.<br>• 2020 முதல் காணப்படும் கொவிட் 19 தொற்றுநோய் நிலைமை.<br>• எதிர்காலத்தில் இயன்றளவு தத்துரூபமான மற்றும் சரியான வருமான மதிப்பீடு தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.<br>ஆகிய காரணங்கள் சமர்ப்பிக்கப்பட்டடிருந்தன. | நிதிப் பிரமாணம் 85(1)(இ) இன் பிரகாரம் வருமான மதிப்பீடு தயாரிக்கும் போது கூடியளவு தத்துரூபமாக மற்றும் சரியாக மதிப்பீடுகள் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுடியிருத்தல் மற்றும் அந்த வருமானங்களை அறவீடு செய்வதற்கு காலத்திற்கு பொருத்தமான மற்றும் செயற்திறனுள்ள வேலைத்திட்டம் ஒன்று செயற்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | நிதிப் பிரமாணம் 128(2)உ பிரகாரம் வருமான கணக்கீட்டு உத்தியோகத்தர்களினால் அரசாங்கத்திற்கு கிடைக்க வேண்டிய நிலுவை வருமானங்களை தாமதம் இன்றி சேகரித்துக் கொள்ளல் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். எனினும், மீளாய்வாண்டு இறுதியளவில் 10 அரச நிறுவனங்கள் மற்றும் 02 தனியார் நிறுவனங்களிலிருந்து 02 வருடங்கள் முதல் 17 வருடங்கள் வரையான கால வீச்சில் கூட்டுத்தொகை ரூபா 12,674,073 தொகையான நிலுவை விமான வாடகைக் கட்டண வருமானம் ஒன்று காணப்பட்டது. | மீண்டும் இவ்வாறு நிலுவைகள் ஏற்படாதவாறு உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை ஒன்று தயாரிக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டுள்ளது. | -மேற்படி- |

## 2.2 செலவு முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வருவாய் செலவு விடயங்கள் 22 இல் 10 சதவீதம் முதல் 82 சதவீதம் வரையான வீச்சில் ரூபா 1,136,078,861 இற்கான சேமிப்புக்கள் காணப்பட்டதுடன், மூலதனச் செலவு விடயங்கள் 18 இல் 13 சதவீம் முதல் 99 சதவீதம் வரையான வீச்சில் ரூபா 2,133,683,282 இற்கான சேமிப்புக்கள் காணப்பட்டன. | இவ்வாண்டில் இடைகால ஒதுக்கீட்டுக் கணக்கின் மூலம் ஏற்பாடுகள் வழங்கும் போது கிடைத்திருந்த ஆலோசனைகளின் படி முதல் 04 மாதங்களுக்காக மாத்திரம் திட்டங்கள் தயாரிக்கப்பட்டன. இவ்வாறு செயற்படும் போது சிக்கல் நிலைமைகள் ஏற்பட்டிருந்தன. விஷேடமாக விமானப்படை அனேகமான கொள்வனவுகள் மேற்கொள்ளப்படுவது வெளிநாட்டு சந்தை ஊடாகவாகும். அங்கு ஏற்படுகின்ற சிக்கல்களும் இதற்கான பாதிப்பை ஏற்படுத்தியுள்ளன. | மதிப்பீட்டு ஏற்பாடுகள் கூடியளவு எதிர்பார்க்கும் குறிக்கோளை நிறைவேற்றக்கூடிய முறையில் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 2.3 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால் வழங்கியிருந்த ஏற்பாடுகளை பயன்படுத்துதல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது 08 செலவுத் தலைப்புகளின் கீழ் 11 செலவு விடயங்களின் மூலம் ஏனைய திணைக்களங்கள் / அமைச்சுக்களுக்காக செலவீடு மேற்கொள்வதற்காக ரூபா 1,042,464,388 இற்கான ஏற்பாடுகள் கிடைத்திருந்ததுடன், அவற்றில் ரூபா 76,638,327 இற்கான ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டிருந்தன. அவற்றில் செலவு விடய இலக்கம் 232-02-01-00-2002 இன் கீழ் கிடைத்திருந்த ரூபா 929,300 தொகைக்கான மொத்த ஏற்பாடுகளும் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு செலவிடப்படாமல் சேமிக்கப்பட்டிருந்தது. | 232-01-1-2002<br>2020 ஒக்தோபரில் ஏற்பாடுகள் கிடைத்திருத்தல் மற்றும் பெறுகை அலுவல்கள் பூர்த்தி செய்ய முடியாமல் போதல்.<br>253-01-2-0-1501<br>2019 ஆண்டின் ஓய்வூதியத்திற்கு தகைமையுள்ள சேவை நபர்கள் இறத்தல் காரணமாக இருந்தல்.<br>403-2-6-3-2014<br>ஏற்பாடுகள் வழங்கப்பட்ட நாளின் படி பெறுகை நடவடிக்கைகள் பூர்த்தி செய்ய முடியாமை என.<br>436-02-3-1-1501<br>கொரோனா தொற்றுநோய் நிலைமை<br>103-01-2-1-1501<br>இராணுவ பெற்றோர் கொடுப்பனவு உட்பட பெற்றோர்கள் இறத்தல், சேவை நபர்களின் படையின் சேவை முடியுறுத்தல்.<br>103-02-12-27-2509<br>கொரோனா பெறுகை அலுவல்கள் திட்டத்தின் படி மேற்கொள்ளப்படாமை.<br>ஆகிய காரணங்கள் சமர்ப்பிக்கப்படுகின்றன. | மதிப்பீட்டு ஏற்பாடுகள் கூடியளவு எதிர்பார்க்கும் குறிக்கோளை நிறைவேற்றக்கூடிய முறையில் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 2.4 கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பிரிவு 38 இன் ஏற்பாடுகளின் படி இலங்கை விமானப்படையின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை ஒன்று தயாரிக்கப்பட்டு பேணிச் செல்லப்படுகின்றது என பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு | காலாண்டுக் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடாத்துதல், உள்ளகக் கட்டுப்பாட்டு நடைமுறைகள் மீளாய்வு செய்தல், கணக்காய்வுச் செலவுகள் சேவைப் பராமரிப்பு, உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளல் மற்றும் உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகள் கணக்காய்விற்கு சமர்ப்பித்தல்கள், | 2018 இன் 19 இலக்க தேசிய கணக்காய்வு அதிகார சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| உத்தியோகத்தர் உறுதிப்படுத்தப்பட வேண்டியதுடன், அந்த முறைமையின் ஆக்கபூர்வ தன்மை தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வு மேற்கொள்ளப்பட்டு அதன்படி முறைமையை வெற்றிகரமாக மேற்கொள்வதற்கு தேவையான வித்தியாசங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும், அந்த மீளாய்வுகள் எழுத்துமூலம் மேற்கொள்ளப்பட்டு அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், அவ்வாறான மீளாய்வுகள் மேற்கொள்ளப்பட்டதற்கான கூற்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | காலாண்டு ரீதியாக உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளை மதிப்பாய்வு செய்யும் அறிக்கைகள் சமர்ப்பித்தல் நி.பி. 135-139 பிரகாரம் அதிகாரக் கையளிப்பு மற்றும் பண்டக் கணிப்பீட்டு சபை நடாத்தப்பட்டு ஒவ்வொரு வருடமும் மார்ச் 31 திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பித்தல் ஆகிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. | |

## 2.5 முற்பணங்கள் வழங்குதல் மற்றும் தீர்த்தல்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 அளவில் இறந்த சிவில் உத்தியோகத்தர்களிடம் அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 596,942 இற்கான கடன்மீதிகள், ஓய்வு பெற்ற சிவில் உத்தியோகத்தர்களிடம அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 514,035 தொகை கடன்மீதிகள் மற்றும் சேவையை விட்டுச்சென்றுள்ள சிவில் உத்தியோகத்தர்களிடம் அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 7,568,745 இற்கான கடன்மீதிகள் 05 வருடங்களுக்கு மிகையான காலம் முதல் காணப்பட்டன. | (i) இறந்த மற்றும் ஓய்வு பெற்ற உத்தியோகத்தர் தொடர்பாக தீர்க்கப்படாமல் காணப்பட்ட கடன்மீதிகள் தொடர்பாக சிவில் நிருவாகப் பணிப்பாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.<br>(ii) கொரோனா தொற்றுநோய்க்கு மத்தியில் கடன் அறவீட்டுச் செயற்பாடுகள் பின்னடைவு ஒன்று ஏற்பட்டுள்ளது.<br>(iii) இறந்த மற்றும் ஓய்வு பெற்ற உத்தியோகத்தர் தொடர்பாக பழைய ஆவனங்கள் மூலமாக பதிவேடுகளில் இருந்து தகவல்கள் பெற்றுக்கொண்டு ஓய்வூதியத் திணைக்களத்திற்கு அனுப்பி ஏற்பாடுகள் பெற்றுக்கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்படுவதுடன், பணிக்கொடையிலிருந்து | உத்தியோகத்தர்களிடம் அறவிடப்பட வேண்டிய மீதிகளை விரைவாக அறவீடு செய்வதற்காக செயற்திறனுள்ள மற்றும் ஆக்கபூர்வமான நடைமுறை ஒன்று தயாரிக்கப்பட்டு கடன் தகவல்கள் நாளதுவரை ஆக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | அறவிடப்படாத கடன்மீதிகள் மாதாந்த ஓய்வூதியத்தில் இருந்து தவணைகளாக அறவீடு செய்யப்பட்டு வருகின்றது.<br>(iv) சேவையை விட்டுச் சென்றுள்ள உத்தியோகத்தர்களின் தகவல்கள் பிரதேச செயலாளர்கள், கிராம உத்தியோகத்தர் மூலம் ஊழியர்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன், அவற்றை அறவீடு செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | |
| (ஆ) | தாபனக் கோவையின் xxiv அத்தியாயத்தின் பிரிவு 4.1 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு சேவையை விட்டுச் சென்றுள்ள மற்றும் ஓய்வு பெற்றுள்ள உத்தியோகத்தர்களிடம் அறவிடப்பட வேண்டிய முற்பண மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ஓய்வுபெற்ற மற்றும் இறந்த உத்தியோகத்தர்கள் மற்றும் சேவையை விட்டுச் சென்ற உத்தியோகத்தர்களிடம் அறவிடப்பட வேண்டியிருந்த கடன் தொகை முறையே ரூபா 5,291,449 தொகை மற்றும் ரூபா 11,359,775 தொகையாக இருந்தது. அவற்றில் 05 வருடங்களை விட மிகைத்துள்ள அறவிடப்பட வேண்டிய மீதிகள் முறையே ரூபா 1,110,887 தொகை மற்றும் ரூபா 8,382,641 தொகை ஆகும். | - மேற்படி - | - மேற்படி - |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 பெறுகைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | விமானப்படைக்கு தேவையான 1,000 மெத்தைகள் கொள்வனவு செய்வதற்காக தெரிவு செய்யப்பட்ட கூறுவிலைதாரருக்கு ரூபா 4,199,076 தொகை செலுத்தப்பட்டிருந்தது. இங்கு பெறுகை வழிகாட்டல் கோவையின் 5.3.12 இன் படி விலைகூறல் பாதுகாப்பு முறி ஒன்று சமர்ப்பிக்கப்பட்டிருக்காததுடன் அதற்காக விலைகூறல் பாதுகாப்பு கூற்றொன்று விலைகூறல் திறந்த பின் 13 நாட்களுக்கு பின்னர் வழங்கப்பட்டிருந்தது. பெறுகை வழிகாட்டல் கோவையின் 7.8 பந்தியின் பிரகாரம் விலைகூறல் திறக்கும் சந்தர்ப்பத்தில் தள்ளுபடி செய்ய வேண்டியிருந்த போதிலும் அந்த விலைகூரல்தாரருக்கே பெறுகையை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்திருந்தது. | குறிப்பிட்ட விலைகூரல்தாரர் இலங்கை விமானப்படையின் அரச சார்ப்பற்ற நிதியம் ஒன்று என நிறுவப்பட்டிருந்தது. அதேபோல் திணைக்கள கொள்வனவு குழுவின் அங்கீகாரத்தின் மூலம் வழங்குனர் என பதிவு செய்யப்பட்டிருத்தல். விலைகூறல் பாதுகாப்பு முறி சமர்ப்பிக்காமையால் அதற்குப் பதிலாக விலைகூறல் பாதுகாப்புக் கூற்றொன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. இந்த செயற்திட்டத்தின் கொள்திறன், மெத்தைகளின் தரம் மற்றும் குறைந்த விலைகூறல் என்பவற்றை கவனத்தில் எடுத்து தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவினால் கேள்வி வழங்கப்பட்டிருந்தது. | பெறுகை வழிகாட்டல் கோவையில் குறிப்பாக காட்டியிருந்த ஏற்பாடுகளை கடைபிடித்து இணங்கி பெறுகை நடவடிக்கைகள் நிறைவேற்றப்படல் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | 2004 ஆண்டு முதல் 2014 ஆண்டு வரையான காலப்பகுதியின் திருத்த வேலைகளுக்காக 72 விமான உதிரிப் பாகங்கள் வெளிநாடுகளுக்கு அனுப்பப்பட்டிருந்ததுடன், அந்த விமான உதிரிப்பாகங்கள் 06 வருடங்கள் முதல் 16 வருடங்கள் வரையான கால வீச்சில் மீண்டும் விமானப்படைக்கு கிடைத்திருக்கவில்லை. | 2004 – 2019 வரையான காலங்களுக்காக வெளிநாடுகளுக்கு அனுப்பப்பட்ட விமான உதிரிப்பாகங்களுக்காக விசாரணை நீதிமன்றம் ஒன்று நியமனம் செய்யப்பட்டு விசாரணைகள் நடைபெற்றுக்கொண்டிருத்தல். விமானப்படை தலைமையகத்தின் மேற்பார்வையின் கீழ் நடாத்துதல் மற்றும் 2016 – 2019 வரை விமான உதிரிப் பாகங்கள் தற்போது வெளிநாடுகளில் பராமரிப்பு வேலைகள் நடைபெறுகின்றன ஆகிய காரணங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்றன. | வெளிநாடுகளுக்கு அனுப்பப்படும் சொத்துக்களின் மேற்பார்வை உரிய முறையில் பேணப்படல் மற்றும் அச்சொத்துக்கள் உரிய முறையில் மீண்டும் பெற்றுக்கொள்வதற்காக செயற்திறனுள்ள நடைமுறையொன்று செயற்படுத்தப்பட வேண்டும். |

## 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | விமானப்படைக்குச் சொந்தமான 49,999 சதுர அடிக்கான 29 கட்டடங்கள் 2010 ஆண்டு முதல் 2020 திசெம்பர் கணக்காய்வுத் திகதி வரை விளைவற்றுக் காணப்பட்டது. | இந்தக் கட்டடங்களின் திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன எனவும், பொருத்தமற்ற கட்டடங்கள் உடைத்து அகற்றுவதற்கும் எதிர்காலத்தில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என அறிவிக்கப்படும். | பயன்படுத்தக்கூடிய கட்டடங்களை திருத்த வேலை மேற்கொண்டு பயன்படுத்துவதற்கு மற்றும் விமானப்படைக்கு சொந்தமான அனைத்துக் கட்டடங்களையும் உச்சமட்ட பயன்பாட்டை உறுதிப்படுத்துவற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | விமானப்படையினால் பயன்படுத்தப்படும் 02 படை முகாம்கள் மற்றும் படைப் பிரிவின் பயிற்சிப் பாடசாலை அமைந்துள்ள காணிகளின் உரிமையை மீளாய்வாண்டு இறுதி வரை உரித்தாக்கும் நடவடிக்கை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | முகாம்கள் அமைந்துள்ள காணிகளின் உரிமை வன பாதுகாப்புத் திணைக்களத்திற்கு சொந்தமாக இருப்பதுடன் வருடாந்தம் அனுமதிப் பத்திரங்களின் மூலம் முகாம்கள் நடாத்தப்பட்டு வருகின்றன. குறிப்பிட்ட காணிகளை உரித்தாக்கித் தரும்படி வன பாதுகாப்புத் திணைக்களத்திற்கு கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. | படையினால் பயன்படுத்தப்படும் கட்டடங்களின் சட்டரீதியான உரிமையை உரித்தாக்குவதற்காக விரைவாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.3 நட்டங்கள் மற்றும் சேதங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோக த்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிப் பிரமாணம 101(2), 105(2)(ஆ) பிரகாரம் முப்படைகளின் சேதங்கள் தொடர்பாக தயாரிக்கப்பட்டிருந்த விஷேட சட்டக் குறிப்பு 07 இன் பிரகாரம் நட்டங்கள் சேதங்கள் தொடர்பாக விரைவாக செயற்படுதல் மற்றும் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். எனினும், நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த குறிப்பின் படி கூட்டுத்தொகை ரூபா 970,821,082 தொகைக்கான நட்டங்கள் மற்றும் சேதங்கள் 287 சம்பவங்கள் காணப்பட்டதுடன், அவற்றில் ரூபா 15,935,809 தொகைக்கான 26 சம்பவங்கள் 10 வருடங்களை விட மிகைத்தவை ஆகும். மேலும் ரூபா 119,015,015 தொகைக்கான 21 சம்பவங்கள் 05 வருடங்களுக்கும் 10 வருடங்களுக்கும் இடையில் நடைபெற்றிருந்த சேதங்கள் ஆகும். அதேபோல் 5 வருடங்களுக்கு குறைவான கூட்டுத்தொகை ரூபா 835,870,258 தொகைக்கான 240 சம்பவங்கள் காணப்பட்டன. | • சேதங்கள் தொடர்பாக பொறுப்புச் சொல்ல வேண்டிய நபர்களிடம் பணம் மாதந்தம் அறவீடு செய்யும் போது காலதாமதம் ஆதல்.<br>• சேதங்கள் தொடர்பாக பொறுப்புச் சொல்ல வேண்டிய தரப்பினர் சேவையை விட்டுச் சென்றிருந்த போது அதற்குரிய பணத்தை அவர்களிடம் அறவீடு செய்வதற்காக நீதிமன்ற நடவடிக்கை எடுக்க நேரிட்டிருத்தல்.<br>• சேதங்கள் தொடர்பாக வழக்குத் தாக்கல் செய்யும் போது வழக்கு முடியும் வரை அறவீடுகள் தாமதம் அடைதல்.<br>• சேதங்கள் தொடர்பாக பொலிஸ் குற்றவியல் விசாரணைத் திணைக்களம் போன்ற நிறுவனங்களினால் நடாத்தப்படும் விசாரணைகள் காலதாமதம் அடைதல் ஆகிய காரணங்களினால் அறவீடுகள் தாமதம் அடைதல்.<br>போன்றவை காட்டப்பட்டிருந்தன. | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் சேதங்கள் மற்றும் நட்டங்கள் தொடர்பாக சேதத்தின் பெறுமதியை விரைவாக பெறுமதி மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | நிதிப் பெறுமானம் 104(4) மற்றும் முப்படைகளின் சேதங்கள் தொடர்பாக தயாரிக்கப்பட்டிருந்த விஷேட சட்ட குறிப்பின் பிரகாரம் சேதம் ஒன்று ஏற்பட்ட நாள் முதல் 03 மாதங்களுக்குள் சேதத்தின் பெறுமதியை கணித்து முழுமையான அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும் எனினும் வருடாந்த நிதிக்கூற்றுக்களில் நட்டங்கள் மற்றும் சேதங்கள் தொடர்பான | ஆதனங்களுக்கு ஏற்பட்டிருந்த சேதங்கள் காப்புறுதி உள்ளடக்கத்தின் மூலம் அறவீடு செய்யப்பட்டிருந்ததுடன், சேதமொன்று ஏற்பட்டிருக்காமை 2020 ஆண்டின் சேதம் தொடர்பான கூற்று சமர்ப்பிக்கும் சந்தர்ப்பத்தில் சேதத்தை கணிப்பதற்கு முடியாமல் போதல் ஆகிய | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | கூற்றில் குறிப்பு (i) இல் அடங்கியுள்ள 2019/2020 ஆண்டுகள் தொடர்பாக ஏற்பட்டிருந்த 9 சேதங்கள் நட்டங்கள் சம்பவங்கள் 1 வருடம் முதல் 6 மாதங்கள் வரையான காலவீச்சில் சேதங்களின் பெறுமதி கணிக்கப்பட்டிருக்கவில்லை. | காரணங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. | |
| (இ) | 2016 மே 25 திகதி ஏற்பட்டிருந்த Bell – 206 (SHT 551) கொண்ட ஹெலிகொப்டர் வானத்தில் பறக்கும் போது விபத்துக்குள்ளாகி இருந்தமையால் ஏற்பட்டிருந்த ரூபா 113,150,000 தொகைக்கான சேதம் நி.பி. 109 இன் கீழ் புத்தகத்தில் இருந்து பதிவழிப்பதற்கு 2020 ஜூன் 03 திகதி திறைச்சேரிச் செயலாளரின் அங்கீகாரம் கிடைத்திருந்த போதிலும் அதனை மீளாய்வாண்டிலும் பதிவழித்திருக்கவில்லை. | புத்தகங்களில் இருந்து பதிவழிப்பதற்கான அங்கீகாரம் 2020 ஜூன் 26 திகதி உபகரண ஏற்பாடுகள் மற்றும் கணக்கீட்டு அலகு மற்றும் வழங்கல் பணிப்பாளருக்கு அனுப்பப்பட்டிருந்ததுடன், பதிவழித்தல் அலுவல்கள் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் புத்தகத்திலிருந்து பதிவழிப்பதற்கான கட்டளையின் படி சேதம்/நட்டம் அகற்றுவதற்காக விரைவாக செயற்பட வேண்டும். |

## 4. மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு அதிகாரம் அளிக்கப்பட்ட உத்தியோகத்தர்களின் அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை 2,545 ஆக காணப்பட்டதுடன், அவற்றில் 488 வெற்றிடங்கள் காணப்பட்டன. அதிகாரம் அளிக்கப்படாத (ஏனைய பதவிகளில்) உத்தியோகத்தர்களின் அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை 34,344 தொகையாக இருந்ததுடன் அவற்றில் வெற்றிடங்கள் 2,953 ஆக இருந்தது. ஏனைய பதவிகளில் அனேகமான வெற்றிடங்கள் அதாவது 1956 வெற்றிடங்கள் தலைமை வான்படை மற்றும் வான்படை பதவிகளாகும். | மொத்த வெற்றிடங்களில் 478 வெற்றிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன. | எதிர்பார்த்த குறிக்கோளை நிறைவேற்றிக்கொள்வதற்கு உதவக்கூடிய விதமாக உச்சமட்ட பதவியணி ஒன்றை பேணல் வேண்டும். |